# இத்தாவில் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றிய ஆய்வு

வினோதினி பொன்னுத்துரை, சுபாஜினி உதயராசா [a]
[a] புவியியல்துறை, கலைப் பீடம், யாழ்ப்பாண பல்கலைகக்ழகம்
vinovarsika@yahoo.com

ஆய்வுச்சுருக்கம்

ஒரு நாட்டில் அல்லது பிரதேசததில் சமூக பொருளாதார அரசியல் ரிதீயாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஓர் முன்னேற்றகரமான நிலை அபிவிருத்தி எனப்படும். நிலைத்து நிற்கும் அபிவிருத்தி என்பது தாம் செய்கின்ற செயறப்பாடுகள் சூழலை பாதிக்காத வண்ணம் வளஙக்ளை தறக்ால் மறறும் எதிரக்ால சநத்திக்குப் பயனப்டும் வகையில் மேறகொளளும் செயறப்ாடு நிலைதது நிற்கும் அபிவிருத்தி எனப்படும். சமூக பொருளாதார முழுமையான வளர்ச்சி எனும் போது பொருளாதார ரீதியான உற்பத்தி அதிகரிப்பு, அடிபப்டை தேவைகளின் விருத்தி, சுகாதார தேவைகளின் அபிவிருத்தி, தொடர்பாடல் ரிதீயாக வளர்ச்சி தன்மை, சமூக பொருளாதார ரிதீயாக பாகுபாடற்ற தன்மை, என்பனவாகும். இத்தாவில் கிராமத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி பற்றிய இவ் ஆய்வானது இத்தாவில் கிராம மக்களின் சமூக பொருளாதார நிலைகளை கண்டறிதல், அபிவிருத்திக்கான உள்ளார்ந்த வளவாய்ப்புக்களை இனஙகாணல், அபிவிருத்திக்கான பரிந்துரைகளை முன்மொழிதல் நோக்கங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டுள்ளது. இங்கு சமூக பொருளாதார நிலை, பிரச்சி னைகள் பற்றி அறிய முதல்நிலை, இரண்டாம் நிலை தரவுகள் உதவின. இங்கு முதல் நிலைத்தரவானது வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு, போன்ற முறைகேடாகவும் 2ஆம் நிலைத்தரவானது திணைக்களப் பதிவேடுகள், அறிக்கைகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் வெளியீடுகள் போன்றவற்றிலிருந்து பெறபப்டட்ன. அத்துடன் இங்கு பயனப்டுதத்பப்டடுள்ள மென்பொருளாக Microsoft excel 2007 பயனப்டுதத்பப்டடுளள்து. அதாவது இவ் ஆய்வுக்கட்டுரையில் இம் முறையினூடாக அட்டவணை ரீதியான விளக்கங்களும் வரைபட ரதீயான விளக்கங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இவ் ஆய்வில் இருந்து ஆய்வுப் பிரதேசத்தின் சமூக பொருளாதார நிலைகள், மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு இதற்கான காரணங்கள் இப்பிரச்சினைகளால் ஏற்படும் விளைவுகள் அதற்கான தந்திரோபாயங்கள் என்பன முன்வைகக்ப்பட்டுள்ளன. இவ் ஆய்வின் முடிவாக, இத்தாவில் கிராமமானது தற்போதைய நிலையில் சமூக பொருளாதாரரீதியில் பின்தங்கியுள்ளதுடன் இங்குள்ள வளவாய்ப்புக்கள் அனைத்துமே அழிக்கப்பட்டுள்ளது எனவும் கண்டறியப் பட்டுள்ளது. எனவே அப்பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டங்கள் இறுதியில் முன்வைகக்ப்பட்டுள்ளதால் எதிர் காலத்தில் இப்பிரதேசத்தின் வள வாய்ப்புக்களை இனம் கணடு அதன் மூலம் நிலைதது நிற்கும் சமூக பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுத்து அம்மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த இவ் ஆய்வானது பயனுடையதாக அமையும்.

திறவுச் சொற்கள் - சமூக பொருளாதாரம், மீள்குடியேற்றம், இடப்பெயர்வு, வாழ்க்கைத்தரம்